

சென்னை கிழக்கு மாவட்ட திரு.வி.க. நகர் தெற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே.எஸ். சுரேஷின் தாயார் திருமதி எஸ்.சாந்தி அவர்களின் 13 வது நாள் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியில் அன்னாரது திருவுருவப் படத்தை சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, கே.எஸ். இரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் எம். சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன் மற்றும் பரிதி இளம்சுருதி, டி.லோகேஷ், மு.சரவணன், பெரம்பூர் ராஜன், ஏ.ஜி.எஸ். கோல்டு ஜி, இரா.வீரமணி, கா.ராஜ்முகமது, பி. சுகுமார். த.கருணாநிதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி பா.பி.தாஸ், எஸ்.சசிகுமார், பொல்சுரேஷ், புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.இசட்.அபோய், எம்.ஏ.டீக்கா, மா.ருத்ரா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே.எஸ்.சுரேஷ் தாயார்

எஸ்.சாந்தி நினைவு நாள் அஞ்சலி - திருவுருவப்படம்!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி!

சென்னை, நவ. 5- சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் தெற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே.எஸ். சுரேஷின் தாயார் திருமதி எஸ். சாந்தி அவர்களின் 13 வது நாள் நினைவு அஞ்சலி, திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி அக் 1 ந் தேதி யன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்தை சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, கே.எஸ். இரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் எம். சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன் மற்றும் பரிதி இளம்சுருதி, டி.லோகேஷ், மு.சரவணன், பெரம்பூர் ராஜன் ஏ.ஜி.எஸ். கோல்டு ஜி, இரா.வீரமணி, கா.ராஜ் முகமது, பி. சுகுமார். த. கருணாநிதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி பா.பி.தாஸ், எஸ்.சசிகுமார், பொல்சுரேஷ், புஷ்பராஜ், ஜி.கிருஷ்ண குமார், எம்.இசட்.அபோய், எம்.ஏ.டீக்கா, மா.ருத்ரா, வே.து.தாமரைசெல்வன், எல்.சுப்ரமணி, அ.கதிரவன், இரா. புருஷோத்தமன், கி.நாகலிங்கம், மைனர் எஸ்.பாபு, எச். திவாகர், கோ.கருணாகரன், சுரேஷ்கோபி, மெடிக்கல் சதீஷ், ந.தமிழ்மணி, எஸ்.சதீஷ்குமார், கனல் கங்கா, ஆர்.சீனிவாசன், கேபிள் டிவி சுரேஷ், எஸ்.அமீன்துனின், எம். மதன், எம்.மூர்த்தி, ஜி. பிரேம்குமார், இரா.தட்சணாமூர்த்தி, ஆ.அஜித், எம்.ரங்கநாதன், அ. மூவேந்தன், சி.தர்மன், பி.தமிழ்வாணன், ஆர்.குருமூர்த்தி, கே.பி. சுரேஷ், இரா.ஆறுமுகம், எஸ்.பூங்காவனம், தில்லை குணசேகரன், மு.க.மோகன், எஸ். சி.பாபு, ஆர்.அருண்குமார், ரயில்வே தேவராஜ், எஸ்.சி.பாபு, ஆர்.அருண்குமார், ரயில்வே தேவராஜ், பெயின்ட் பாஸ்கர், எல்.பிரேமலா, டி.ஜெயமேரி மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சியின் நிகழ்ச்சிகளுக்கு

மேயர் - மாமன்ற உறுப்பினர்களை அழைக்க ஆணையாளர் மறுப்பு!

சேலம், நவ. 5- சேலம் மாநகராட்சியில் தி.மு.க. ஆட்சி காலத்தில் நிதி ஒதுக்கி பள்ளி கட்டிடங்கள் அங்கன் வாடி மையங்கள் நியாய விலைக் கடைகள் கட்டி முடிக்கப் பட்டது இதன்படி சேலம் மாநகராட்சி 43 வது கோட்டத்தில் உள்ள கிச்சிப் பாளையம் புதுத்தெரு பள்ளியை புதிதாக கட்ட தி.மு.க மாமன்ற உறுப்பினர். எம். குண சேகரன் கடந்த 2024ம் ஆண்டு உள்ளாட்சி துறை அமைச்சரிடம் நேரில் சென்று ரூ 1 கோடியே 20 லட்சம் புதிய கட்டிடம் கட்ட பெற்றுக் கொடுத்ததில் கட்டப் பட்டது தான் இந்த பள்ளி கட்டிடம் உள்ளாட்சி நிதியில் இருந்து கட்டப்பட்டது அப்படி இருக்கையில் சேலம் மாநகர மேயர், அந்த கோட்டத்தின் மாமன்ற உறுப்பினர் களிடம் பள்ளி கட்டிடம் அமைச்சர் திறந்து வைப்பதை குறித்து மாநகராட்சி ஆணையாளர் ஆலோசித்து இருக்க வேண்டும் ஆனால் ஆணையாளர் ஆதித்ய நீலம் அமைச்சரைக் கொண்டு திறப்பது குறித்து முடிவு செய்து விட்டு மேயருக்கும் நிதி பெற்றுத் தந்த மாமன்ற உறுப்பினர் எம். குணசேகரனுக்கும் மாநகராட்சி ஆணையாளர் அழைக்க வில்லை இது குறித்து நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஆணையாளரிடம் நேரில் இந்த நிகழ்ச்சிக்கு மேயரை ஏன்? அழைக்கவில்லை இந்த மாநகரின் முதல் குடிமகன் என்றும் நிதியை பெற்றுத் தந்த இந்த கோட்டத்தின் மாமன்ற உறுப்பினர் நான் எனக்கும் அமைச்சர் கட்டிடத்தை திறப்பது குறித்து கூறவில்லை என்று கடும் கண்டனத்தை தெரிவித்தார்

இந்த மாநகராட்சி ஆணையாளர் த.வெ.க கட்சியின் மாவட்ட செயலாளர் போல் கடந்த 6 மாத காலமாக நடந்து கொள்கிறார் மேயர் மாமன்ற உறுப்பினர்களை சந்திக்க மறுப்பதோடு மாமன்றத்தில் நிறைவேற்றும் தீர்மானங்களை மதிப்பதில்லை மேயர் மாமன்ற உறுப்பினர்கள் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பி வைப்பதில்லை. சேலம் மாநகராட்சி மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெறும் அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளை சந்திக்க மறுப்பது ஒரு அரசு அதிகாரி தனது கடமையில் தவறியதாக வே அரசு விதி கூறுவது குறிப்பிட தக்க தாகும்.



தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் இணைந்துள்ள சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர் முன்னேற்ற சங்கத்தில் மேற்கு மாவட்டத் தலைவரும், சென்னை மாநகராட்சி தொ.மு.ச. பொதுச் செயலாளருமான சத்தியாவின் சீரிய முயற்சியில் வீரப் பெண்கள் ஆட்டோ தொழிற் சங்கத்தை சார்ந்த நிர்வாகிகளும், உறுப்பினர்களும் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் முன்னிலையில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் பேரவை இணைப் பொதுச் செயலாளர் ஜெ.விஜயகுமார், பேரவை அலுவலகச் செயலாளர் ஆ.சீ.அருணகிரி, பேரவை செயலாளர் எம்.சண்முகம், ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்ற சங்கத் தலைவர் ஐ.சி.எப். துரை, பொதுச்செயலாளர் ஜி.பழனி, பொருளாளர் பி.பன்னீர் செல்வம், சங்கத்தின் மேற்கு மாவட்டச் செயலாளர் பாட்சா பாபு, துணைத் தலைவர் பி.வி.சரவணன், இராமகிருஷ்ணன், கு.அங்காளப்பன், தாண்டவமூர்த்தி உள்ளட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தூய ஆட்சி நடத்துவதாகக் கூறிக்கொண்டு த.வெ.க. அரசு – இயல், இசை, நாடகமன்றத்

தலைவர் பதவிக்கு ரூ.5 கோடி பேரம் பேசியதை உரிய விசாரணை நடத்த வேண்டும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 5 – தினகரன் நாளேடு 4.11.2026 தேதிய இதழில் 'நடவடிக்கை அவசியம்' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:

த.வெ.க. அரசு ஆட்சி அமைத்ததில் இருந்து லஞ்சம் குறைந்து விட்டது. லஞ்சம் கேட்டால் என் பெயரை சொல்லுங்கள் என மேடைதோறும் முதல்வர் விஜய் கூறிக் கொண்டு வருகிறார். ஆனால், அமைச்சர்கள் பலர் பொதுவெளியில் தங்களை தூய சக்தியாக காட்டிக் கொள்வதாக நினைத்து, உளறிக் கொட்டுகின்றனர். அந்த வகையில் சமீபத்தில் அமைச்சர் ராஜ்மோகன், இயல், இசை, நாடக மன்றத் தலைவர் பதவிக்கு ரூ.5 கோடி லஞ்சம் தர ஒருவர் பேரத்தில் ஈடுபட்டதாக பேசிய பேச்சுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அமைச்சர் பொறுப்பு வகிக்கும் ஒருவர், அரசு நேர்மையாக செயல்படுவதாக பொதுவெளியில் பேசுவது தவறில்லை. ஆனால், பதவிக்காக லஞ்சம் தர முன் வந்ததாகப் பேசிய பேச்சை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. லஞ்சம் தர முன் வந்த ஒருவரைப் பற்றி, ஏன் தமிழக அரசில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு அமைச்சர் ஏன் லஞ்ச ஒழிப்புத்துறையிடம் புகார் தெரிவிக்கவில்லை. அவர் யார்? அவரது பின்புலம் என்ன? பதவியை வைத்து அவர் பெற விரும்பிய ஆதாரம் என்ன இப்படி பல கேள்விகள் எழுகின்றன.

ஏற்கனவே, மதுரை த.வெ.க. எம்.எல்.ஏ., கட்சிப்பதவிக்கு ரூ.15 லட்சம் கேட்பதாக, அவரது கட்சியைச் சேர்ந்தவர்களாலே ஆடியோக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. உள்ளாட்சியில் மேயர் பதவி முதல் கவுன்சிலர் பதவி வரை ரேட் நியமித்து பல லட்சம் வரை பேரம் பேசப்படுவதாகவும் அக்கட்சி நிர்வாகிகள் தரப்பில் பேசி வருகின்றனர். தேர்தலில் வாக்காளர்களுக்குப் பணம் வழங்கியதாக அக்கட்சி பிரமுகரே மேடையில் பேசியது சர்ச்சையை கிளப்பியது.

ரூ.5 கோடி லஞ்சம் தர முன் வந்த தகவல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவரான லயோலா மணி மூலம் வந்ததாக அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார். அவரிடமே மறுப்பு தெரிவித்த விஷயத்தையும் கூறியிருக்கிறார். இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் சட்ட அமலாக்க நிறுவனத்திற்கு அமைச்சர் தகவல் தெரிவிக்கவில்லை. இந்த விவகாரம் மறைக்கப்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக எப்.ஐ.ஆர். பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டுமென லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநருக்கு தி.மு.க. தரப்பில் புகார் செய்யப்பட்டுள்ளது. மேலும், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள், இதுகுறித்து உரிய விசாரணை நடத்தி, உண்மைத் தன்மையை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென கோரியுள்ளனர்.


தினகரன்
நவம்பர் 4, 2026 புதன்கிழமை
நடவடிக்கை அவசியம்
த.வெ.க. அரசு ஆட்சி அமைத்ததில் இருந்து லஞ்சம் குறைந்து விட்டது. லஞ்சம் கேட்டால் என் பெயரை சொல்லுங்கள் என மேடைதோறும் முதல்வர் விஜய் கூறிக் கொண்டு வருகிறார். ஆனால், அமைச்சர்கள் பலர் பொதுவெளியில் தங்களை தூய சக்தியாக காட்டிக் கொள்வதாக நினைத்து, உளறிக் கொட்டுகின்றனர். அந்த வகையில் சமீபத்தில் அமைச்சர் ராஜ்மோகன், இயல், இசை, நாடக மன்ற தலைவர் பதவிக்கு ரூ.5 கோடி லஞ்சம் தர ஒருவர் பேரத்தில் ஈடுபட்டதாக பேசிய பேச்சுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.
அமைச்சர் பொறுப்பு வகிக்கும் ஒருவர், அரசு நேர்மையாக செயல்படுவதாக பொதுவெளியில் பேசுவது தவறில்லை. ஆனால், பதவிக்காக லஞ்சம் தர முன் வந்ததாகப் பேசிய பேச்சை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. லஞ்சம் தர முன் வந்த ஒருவரைப் பற்றி, ஏன் தமிழக அரசில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு அமைச்சர் ஏன் லஞ்ச ஒழிப்புத்துறையிடம் புகார் தெரிவிக்கவில்லை. அவர் யார்? அவரது பின்புலம் என்ன? பதவியை வைத்து அவர் பெற விரும்பிய ஆதாரம் என்ன இப்படி பல கேள்விகள் எழுகின்றன.

மொட்டை அடிக்க வேண்டுமென்கிறார். கேட்டால் தாய் மனநிலையில் கூறினார் என்று விளக்கமும் தருகிறார். இப்படி ஒவ்வொரு அமைச்சரும், சர்ச்சைக்குரிய வகையில் பேசி வருவது த.வெ.க. ஆட்சியில் தொடர்கிறது. இனியாவது, முதல்வர் விஜய், தனது அமைச்சர்கள் மற்றும் கட்சியினரின் நடவடிக்கைகளை கண்காணித்து கடிவாளம் போட வேண்டும். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.



விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. காகுப்பம் மிலிட்டரி கேண்டின் அருகில் பாதாள சாக்கடையில் சேதமடைந்த குழாய்களை மாற்றம் செய்து புதிய குழாய்கள் அமைத்திட வேண்டும் என பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வேலூர் மண்டல பொறியாளர் ராஜேஷ் கண்ணா, நகராட்சி ஆணையர் சியாமளா மற்றும் நகராட்சித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தீப்பொறி ஆறுமுகம்

நவம்பர் 5 (2016)



சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், "இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு "தீப்பொறி" என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் "தீப்பொறி" என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வண்ணை தேவகி

நவம்பர் 5 (2009)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

"கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.